# CHAPTER – 21

# பாண்டியர்கள் கால நாணயங்களில் தொழில்நுட்ப வளர்ச்சி

**முனைவர் மா. பெருமாள்சாமி**
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை,
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), சேலம் – 636007

## முன்னுரை

இந்தியாவில் வேத காலத்திற்கு பிறகு உலோகத்தால் காசுகள் (நாணயங்கள்) தயாரிப்பது அதிகரித்து காணப்படுகிறது. காசுகள் தயாரித்தல் பற்றிய குறிப்புகளை அறிவதற்கு சந்திரகுப்த மௌரியர் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த கௌடில்யர் எழுதிய அர்த்தசாஸ்திரம் என்ற நூலிலிருந்து நமக்கு தெரிய வருகிறது. மேலும் போலி நாணயங்கள் தயாரித்தோர்கள்கூட ருபக்காரன் என்று கூறுகிறது. சங்க காலத்தில் காசுகள் தயாரிக்கும் நுட்பத்தையும் அறிய முடிகிறது. சங்ககல நாணயங்கள் மட்டுமின்றி இடைக்கால நாணயங்கள் தொழில் நுட்பத்தோடு விளங்குவதற்கு முக்கிய பங்காற்றியவர்கள் பாண்டியர்கள் ஆவார்கள். சங்ககால பாண்டியர்களின் செப்பு நாணயங்கள் பலவகை நுட்பத்தில் தயாரிக்கப்பட்டு அவை பலவகைகளாகவும் பிரிக்கப்படுகிறது. மேலும் பல நாணயங்களை தொழில்நுட்பத்துடன் வெளியிட்டு வாணிபத்தை பெருக்கினர்.

## இந்திய நாணயத்தின் தோற்றம்

இந்தியாவில் கி.மு. 6ம் நூற்றாண்டு அல்லது 5ம் நூற்றாண்டு கார்ஷா பணம் வணிகத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை புத்த ஜாதக கதைகளிலிருந்து அறிய முடிகிறது. இருப்பினும் காசுகள் பற்றிய அறிவு மக்களுக்கு இன்றியமையாததாக இருந்தது என்று அர்த்தசாஸ்திரம் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சதமானா என்னும் காசு வகையும் பண்டை காலத்தில் வழக்கத்தில் இருந்ததாக அறியமுடிகிறது. சதமானா என்னும் பெயர் 100 மாணாக்களைக் கொண்டது என்பதை கோடிட்டு காட்டுகிறது ‘‘மானா’’ என்பது ‘‘குஞ்சா’’ விதையின் எடை அளவினை குறிப்பதாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சதமானா காசுவகை பிராமண நூல்களில் மட்டும் அல்லது சம்ஹிதா என்னும் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பண்டைய காலத்தில் வசதி படைத்த நிலையிலிருந்த பிராமணர்கள் லேக, ரூப ஆகியவற்றை படித்தார்கள் என்பதும், அவர்கள் படித்தவற்றுள் ரூப என்பது குறிப்பிடப்படுவது காசு வகை பற்றிய நூல் என்பதும் தெரிய வருகிறது. அச்சாக்கப்பட்ட காசுகளை சரிபார்க்க அதிகாரிகளும் பண்டை காலத்தில் இருந்தனர் என்பதும் புலனாகிறது. மேலும் பண்டைய காலத்தில் மதிப்புடைய பொருள்களை வாங்கும் நிலை ஏற்பட்டபோது குன்றிமணிகள் வணிகத்தின் மையப்பொருளாக மக்கள் கையாண்டனர். அக்குன்றிமணியில் இருந்துதான் காசுகள் உருவானது என்று சரித்திரம் உண்மையை உணர்த்துகிறது.

### பண்டைய நாணயங்களில் தொழில்நுட்பங்கள்

பண்டைக்காலம் முதல் நாணயங்கள் வரலாற்றுச் சான்றாக பயன்படுவதுபோல் அறிவியல் சிந்தனை அறியமுடிகிறது. முதன்முதலில் நாணயங்கள் தயாரிக்கப்படுவதற்கு முன்பே முத்திரைகள் உருவாக்கப்பட்டது. உலோகத்தை சேர்த்து அதை சுத்தப்படுத்தி சுத்தம் செய்யப்பட்ட உலோகத்தை பட்டைக்கல்லில் வைத்து சம்மட்டியால் அடித்து நீண்ட தகடுகளாக செய்யப்பட்டு, அவ்வாறு செய்யப்பட்டவை சிறு துண்டுகளாக வெட்டப்பட்டு அத்துண்டுகளில் முத்திரை பொறிகள் கொண்டு முத்திரை பதித்தனர் என்று குறிப்பிடப்படுகின்றது. இதே பாணியில்தான் இன்றும்கூட உலகெங்கும் காசுகள் அச்சிடப்படுகின்றன.

மேலும் நவீன முறையில் இயந்திரத்தை கொண்டு அச்சடிக்கும் முறை இப்போது இருப்பதுபோல் அக்காலத்திலும் நாணயங்களை மதிநுட்பத்தின் மூலம் உருவாக்கி இருப்பதாக அறிய முடிகிறது. முத்திரைகளிலும், காசுகளிலும் ஆரம்ப காலத்தில் எழுத்துகள் எதுவும் காணப்படவில்லை. எழுத்துகளுக்கு பதிலாக குன்றுகள், மரங்கள், பறவைகள், விலங்குகள், மனிதன், சூரியன் போன்ற உருவங்களை காண முடிகிறது. மேலும் சதுரம், முக்கோண வகையான உருவாக்கப்பட்ட நாணயங்களை வைத்து எந்த அரசுக்கு உரிய நாணய்கள் என்று அறிய முடிகிறது. பாண்டியர் கால காசுகளில் பாண்டியர்களின் சின்னமான மீன் உருவம் பொறிக்கப்பட்டிருப்பதையும் குறிப்பிடப்பட்டுள்ளது. காசுகளில் முன்பக்கம் சிறு உருவங்கள் காணப்படுகிறது. இக்காசுகள் தயாரிக்க அச்சு சாலைகள் பழக்கத்தில்லை என்று அறிய முடிகிறது.

### சங்க காலத்தைப் பற்றி காசுகள் தரும் தகவல்கள்

சங்க காலத்தைப் பற்றி உண்மை செய்திகளை நாணயங்கள் மூலம் அறிய முடிகிறது. சங்க காலத்தில் பழக்கத்தில் இருந்த பொற்காசுகளை “கானம்” என்றழைக்கப்பட்டது. இவ்வகை காசுகளில் புலி, யானை போன்ற சின்னங்கள் இருந்தன. மேலும் உலோகமான செப்பு காசுகளிலும் யானை, புலி, கற்பகத்தரு போன்ற சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்தது. பெரும்பாலான காசுகளில் எழுத்துக்களில்லை. இவை கி.மு. 2ம் நூற்றாண்டிருக்கும் கி.பி.இரண்டாம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தை சார்ந்த காசுகள் ஆகும். சங்க காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் அகழாய்வில் கிட்டிய செப்புகாசுகளில் ஒருபுறம் புலியும் மறுபுறம் யானையும் புலிக்குமேல் சூரியன் சின்னமும் பொறிக்கப்பட்டதை பார்க்கும்போது சங்ககால மக்கள் சூரிய வழிபாடு செய்திருப்பார்கள் என அறிய முடிகிறது. மேலும் திருவண்ணாமலை அருகில் உள்ள செங்கம் என்ற ஊரில் 120 காசுகள் எடுத்து ஆய்வு மேற்கொண்டு தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டதை நாம் நாணயங்கள் சங்ககால மக்கள் பற்றிய தகவல் வரலாற்றுக் பெருமை சேர்க்கிறது.

### பாண்டியர்களின் நாணயங்கள் தொழில்நுட்பம்

சங்ககாலப் பாண்டியர்கள் காலம் முதல் இரண்டாம் பாண்டிய பேரரசு வரை பாண்டிய மன்னர்கள் தங்கள் ஆட்சியைப் பற்றியும், தங்கள் செய்த கொடைகள் பற்றியும் பலவகை நாணயங்கள் மூலம் வெளிப்படுத்துகின்றனர். நாணயங்கள் மூலம் பாண்டிய மன்னர்களின் தொழில்நுட்பத்தை அறிய முடிகிறது.

### பாண்டியர்கள் கால நாணயங்களின் தொழில்நுட்ப வளர்ச்சி

சங்ககாலத்தைப் பற்றி அறிய பாண்டியர்கால நாணயங்களே வரலாற்றுக்கு பெரிதும் பயன்படுகிறது. சங்ககால பாண்டியர்களின் நாணயங்கள் தமிழ்நாடு தொல்பொருள் துறையினர் அழகன் குளத்தில் **1990–1991** ஆய்வு செய்யும்போது ஒரு நீள் சதுர வடிவ செப்புகாசு ஒன்று கிடைத்தது. இக்காசில் ஒருபக்கம் மீன் சின்னமும் மறுபக்கம் காளை சின்னமும் பொறிக்கப்பட்டது. காளை உருவத்திற்குக்கீழ் நீர்தொட்டி காணப்பட்டது.

மேலும் பல்வேறு இடங்களில் பாண்டியர்கள் காசுகள் பல்வேறு வகை நாணயங்களும் அகழாய்வின்போது எடுக்கப்பட்டுள்ளது. அவை தங்கம், வெள்ளி, செம்பு போன்ற நாணயங்களை வெளியிட்டுள்ளன. சங்ககல பாண்டிய மன்னன் பெருவழுதியின் உருவம் பொறித்த நாணயங்கள் செம்பொன்னால் செய்யப்பட்டவையாகும். அறிவாற்றல் மூலமே இந்நாணயங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் சங்ககால பாண்டியர்கள் மட்டுமல்லாமல் முதலாம் பாண்டியப் பேரரசர்களும் வெளியிட்ட நாணயங்கள் தற்காலத்திய தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட நாணயங்கள்போல் சிறப்புற அமைந்துள்ளன. அக்கால பாண்டிய மன்னர்களின் தகவல் தொழில்நுட்பத்திற்கு சான்றாக இருப்பது நாணயங்கள் ஆகும். பாண்டிய வேந்தர்கள் தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்களை வெளியிட்டுள்ளனர். இரண்டாம் வரகுன பாண்டியனின் தங்ககாசு வெளியிட்டுள்ளதில் முதல் பக்கம் ஸ்ரீ வரகுணன் என்றும் மறுபுறம் கயல் சின்னமும் பொறிக்கப்பட்டுள்ளது. பாண்டிய நாட்டில் கழஞ்சு, காசு, பழங்காசு, பொன்காசு, மாடை என்னும் பெயருடைய நாணயங்கள் இருந்தன. இவை அனைத்தும் முறையாக தனித்தனியாக தொழில்நுட்பத்திலானவை ஆகும். இதில் "கழஞ்சு" என்பது பத்து பொன்னுக்கு சமம் என்று வரகுணப்பாண்டியன் கல்வெட்டு செய்தி கூறுகிறது. பாண்டியர்கால செம்பு நாணயங்கள்தான் தனி தொழில் நுட்பமாகவும், வெள்ளி, பொன்னால் ஆன நாணயங்கள் தனி தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்டது. காசுகளை தயாரிப்பதற்காக பாண்டியர்களின் அரண்மனையில் ஆட்கள் இருந்தனர் என்றும், அவர்கள் அரசர்களின் விருப்பத்தினடிப்படையிலேயே பல்வேறு உலோகக்கலவைகளை பயன்படுத்தி வகைவகையான காசுகளை உருவாக்கினார்கள் என்று இரண்டாம் வரகுண பாண்டியன் கல்வெட்டு கூறுகிறது.

### பாண்டிய பேரரசின் நாணயங்களின் வளர்ச்சியும் வாணிபத் தொடர்பும்

பாண்டியர்கள் கால நாணயங்கள் அவர்களின் வரலாற்றை அறிவதற்கு பயன்படுவதோடு அவற்றில் காணப்படும் முத்திரையழகும் உலோக வார்ப்பழகும் இன்ன பிறவும் சிறந்த கலையழகுடன் காட்சியளிக்கின்றன. பாண்டியர்கள் கால நாணயங்கள் கவின்மிகு கலைகளாக விளங்கியது மட்டுமின்றி வாணிப வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்றியிருக்கிறது என்று கூறப்படுகிறது. ஒருபொருளை வாணிபத்தின் மையப்பொருளாக கொள்ளுதல் வேண்டும் என்று மக்கள் விரும்பியபடி தொழில்களை மேற்கொண்டனர். தொழில்கள் பலகாலம் பாண்டியப் பேரரசு கால சமுதாயத்தில் வணிக மையப்பொருளாக தொடர்ந்து வந்தமை தெரிய வருகிறது. அதன்பின்பு மதிப்புடைய பொருள்களை வாங்கும் நிலை ஏற்பட்டபோது குன்றிமணிகளை வணிகத்தின் மையப்பொருளாக மக்கள் கொண்டனர். அக்குன்றிமணியில் இருந்துதான் காசுகள் உருவானதாக வரலாறு நமக்கு புலப்படுத்துகிறது.

### இரண்டாம் பாண்டியப் பேரரசின் நாணயங்களின் தொழில்நுட்பம்

உலோகம், செம்பு, ஈயம் போன்றவற்றை உருக்கி அதை ஒரே வட்டமான தகட்டில் ஊற்றி அது உலர்ந்து கெட்டியாவதற்குமுன் அவற்றிற்கு மேல் உருவ முத்திரையிட்டு காசுகளை

உருவாக்கி இருக்கின்றனர். பாண்டிய அரசுகள் உலோக தகட்டை சிறு, சிறு துண்டுகளாக்கி கத்தரித்து அவற்றின்மீது மீன் சின்னம் பொறித்து நாணயங்களுக்கு பெருமை சேர்த்திருக்கின்றனர். காசுகள் 105 அல்லது 50 தானிய மணி சின்னங்களைப் பதிப்பதற்காக பயன்படுத்தப்பட்டது என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பாண்டிய மன்னர்கள் இலக்கியங்கள் மூலமும், கலை கட்டிடகலை மூலமும் அறிய தொழில்நுட்பத்தை கையாண்டு பல கோவில்களை கட்டினார்கள் என்று பாண்டியர் கால நாணயங்கள் மூலம் தெரிய வருகிறது. பாண்டியர்கள் ஆட்சி காலத்தில் செப்பு நாணயங்கள் அதிக அளவில் உருவங்களுடன் வெளியிட்டாலும், ஆரம்ப காலத்தில் நல்ல கலைநயத்தை பயன்படுத்தி ஆக்கபூர்வ சிந்தனையோடு வெள்ளி நாணயங்களும் ஒரே அச்சில் செம்பு நாணயங்களையும் வெளியிட்டனர். பாண்டியர்கள் வரலாற்றில் நாணயங்கள் வெளியிட்டதில் இரண்டாம் பாண்டிய பேரரசர்களின் ஆட்சிக்காலம் ஓர் வசந்தகாலம் என்று குறிப்பிடும் அளவுக்கு தொழில் வளர்ச்சியும், வளர்ச்சி அடைவதற்கு காரணம் பாண்டியர்களின் பொற்காசுகள் ஆகும்.

இக்காலக் கட்டத்தில் பாண்டியர்களின் பெயரும், புகழும் தென்னிந்தியா முழுவதும் பரவியது. இரண்டாம் சுந்தரபாண்டியன் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆகிய மன்னர்கள் ஆட்சி காலத்தில் பல விருது பெயர்களில் காசுகள் வெளியிடப்பட்டன. பழ முதல் ஆன அச்சு, பதுக்குளிகை, சோழியகாசு, நாற்பதுக்காக தனபாலம் குளிகை ஆகிய நாணயங்கள் பழக்கத்தில் இருந்தன என்று கல்வெட்டுக்கள் நமக்கு உணர்த்துகின்றன.

தென்காசி பகுதியில் ஆட்சி செய்த பாண்டிய மன்னர்களை தென்காசி பாண்டியர்கள் என அழைக்கப்பட்டனர். அவர்களும் பல நாணயங்கள் செம்பு, வெள்ளி போன்றவற்றாலான நாணயங்களை வெளியிட்டனர். அவற்றில் தென்மேனி கலியுகராமன் என்ற நாணயம் குறிப்பிடத்தக்கதாகும். எனவே பாண்டியர்கால காசுகள் மூலம் சங்க காலம் முதல் தற்காலம் வரை நாணயங்களின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு பெரிதும் பயன்படுகின்றன என்பதை வரலாற்று ஏடுகளின் மூலம் நாம் அறிகிறோம். நாணயங்கள் பாண்டியர்களின் அக்கால அறிவியல் சிந்தனைகளை உட்படுத்தபட்டு இருக்கின்றன என்பதை பல தொல்பொருள் ஆய்வின் மூலம் நமக்கு உணர்த்துகிறது.

## முடிவுரை

பண்டைய இந்திய வரலாற்றை இந்திய வரலாற்றை அறிந்து கொள்ள கௌடில்யரின் அர்த்தசாஸ்திரமும், கல்கணரின் இராஜதரங்கினியும் எவ்வாறு விளங்குகிறதோ அதுபோல பண்டைய அறிவியல்களைப் பற்றியும், தொழில்நுட்பம் பற்றியும் அறிந்து கொள்ள நாணயங்கள் பெரிதும் பயன்படுகின்றன. நாணயங்கள் வேதகாலத்திற்கு பின் உலோகத்தால் காசுகள் தயாரிக்கப்பட்டது. பாண்யடிர்கள் கால நாணயங்களை இன்றும் தகவல்நுட்பங்களையும், செய்திகளையும் அறிய பெரிதும் பயன்படுகிறது.

## அடிக்குறிப்புகள்

1. நடன காசிநாதன் – தமிழ் காசு இயல்
2. டாக்டர் நா. பாலுசாமி – தென்னிந்திய தமிழ்கல்வெட்டுகள், நாணயங்கள்
3. பரமேஸ்வரி லால்குப்தா – நாணயங்கள்

4. இரா. கிருஷ்ணமூர்த்தி – பாண்டிய பெருவழுதி நாணயங்கள்
5. புலவர் பேராசிரியர் கோ.தங்கவேலு – இந்திய வரலாறு 1206 வரை தொகுதி 1, 1976, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை–14.
6. கி.ர.அனுமந்தன், ந.க.மங்கள் முருகேசன் – இந்திய வரலாறு 1206 வரை, தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், சென்னை, 1978,
7. டாக்டர். அ. கணபதி – தமிழ்நாடு வரலாறு 1565 வரை, மல்லிகை பதிப்பகம், மதுரை 1989,
8. www.encyclopedia.com